# நம்பிக்கை வீண்போகாது

**உன் நம்பிக்கை வீண்போகாது. நீதி 23 : 18**

வாக்குத்தத்தம் செய்த கர்த்தரே,
வாக்கு மாறா உண்மை நாதரே,
வாக்கை நம்பி வந்து நிற்கிறோம்.
வல்ல ஆவி மாறி ஊற்றுமே.
தேவனே நீர் பெரியவர், தேவனே நீர் பரிசுத்தர்.
தேவனே நீர் வல்லவர், தேவனே நீர் நல்லவர்.

ஆம், கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நம் தேவன் பெரியவர், பரிசுத்தர், வல்லவர், நல்லவர், ஆதலால் நிச்சயமாகவே முடிவு உண்டு.

**“உன் நம்பிக்கை வீண்போகாது”**

அநேக நேரங்களில் உன் நம்பிக்கை வீண போலவே தோன்றும், இனிமேல் நம்பி ஒரு பிரயோஜனமும் இல்லை என்று உன் உள்ளம் கூறும். ஆனாலும் நம்பிக்கையை இழந்துபோக வேண்டாம். எத்தனை முறை தேவன் உங்கள் வாழ்க்கையில் அற்புதங்களை செய்துள்ளார். அவைகளையாவது நினைத்து, உங்களை தைரியப்படுத்திக்–கொள்ளுங்கள். உலகத்துக்கு உங்கள் நம்பிக்கை பயித்தியம் போல் தோன்றும். உன் நண்பர், உற்றார், உறவினர் உன் நம்பிக்கையைப் பார்த்து பகடி செய்யலாம். மனம் பதற வேண்டாம். உன்னை ஆறுதல் படுத்துவதற்காகவே தேவன் இந்த வார்த்தைகளை எழுதுகிறார்.

சத்துருவினுடைய போராட்டம் அதிகரிக்கம் பொழுதெல்லாம், ஜெயதொனி காத்துக்கொண்டிருக்கிறது என நம்பி கர்த்தரைத் துதியுங்கள். சத்துரு வெள்ளம்போல் மேற்கொள்ள வரும்பொழுது ஆவியானவர் அவனுக்கு விரோதமாகக் கொடியேற்றுவார். நாங்கள் உமது இரட்சிப்பினால் மகிழ்ந்து எங்கள் தேவனுடைய நாமத்திலே கொடியேற்றுவோம் என தைரியமாய் அறிக்கையிடுங்கள். வேதம் கூறுகிறது; ‘‘நீ விசுவாசிக்கிறபடியே உனக்கு ஆகக்கடவது.’’–என்பதாக அருமையான சகோதரனே, சகோதரியே விசுவாசிக்கிறாயா ? ‘‘ நீ விரும்புகிறபடியே உனக்கு ஆகக்கடவது.’’–என திட்டமாகப் பேசுகிறார். **நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது.** அல்லேலுயா!

சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனே கூட இருப்பதாக. ஆமென்!.